செ.வெ.எண் : 684/2019 நாள் : 19.08.2019

## விநாயகர் சதுர்த்தி தினத்தை சிறப்பாக கொண்டாட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப.,, அவர்கள் வேண்டுகோள் !

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. என். ஸ்ரீநாத் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், விநாயகர் சதுர்த்தி முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், இன்று (19.08.2019) நடைபெற்றது.

நடைபெற்ற கூட்டத்தில், இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ், அகில பாரத இந்துமாக சபா, சிவசேனா, விஷ்வ இந்து பரிஷத் போன்ற அமைப்பினர், அனைத்துத்துறை அலுவலர்கள், வட்டாட்சியர்கள், காவல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விநாயகர் சிலைகள் நிறுவுவது மற்றும் நீரின் கரைக்கும் போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

விநாயகர் சிலை அமைக்க உத்தேசித்துள்ள அமைப்பாளர் சிலை வைக்கப்படும் இடத்திற்கு தடையில்லாசான்று பெற்று உரியபடிவத்தில் (படிவம்-1) தொடர்புடைய சார் ஆட்சியர் / கோட்டாட்சியரிடம் உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும். சிலை வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் பொது நிலமாக இருந்தால் ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சி / நெடுஞ்சாலைத் துறையிடமும் தனியார் இடமாக இருந்தால் நில உரிமையாளரின் தடையில்லா சான்று பெறப்பட வேண்டும். ஒலிபெருக்கி மற்றும் அனுமதிக்காக தடையில்லா சான்று தொடர்புடைய காவல் ஆய்வாளரிடமிருந்து பெற வேண்டும். தற்காலிக்கூடாரம் தீ பாதுகாப்பு தர நிலையை கடைபிடிப்பதாக உள்ளன என்பதற்கு தடையில்லா சான்று தீயணைப்பு துறையிடம் பெற வேண்டும். மின் இணைப்பு வழங்கப்படுவதை குறிக்கும் கடிதம் மின்சாரதுறையிடமிருந்து பெறவேண்டும். சிலையை தயாரிக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுரைப்படி சுத்த களிமண் மற்றும் இயற்கையான சாயங்கள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். இரசாயான நிறங்கள் அல்லது பிளாஸ்டர் ஆப் பாரிஸ் பயன்படுத்தக் கூடாது. எளிதில் தீப்பற்றக் கூடியபொருட்கள் கூடாரத்திலோசிலை அமைக்கும் இடத்திலோ இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பந்தலுக்குள் எளிதாக செல்லும் வகையில் உள்ளே செல்ல மற்றும் வெளியே வர விசாலமான பாதைகள் அமைக்கப்படவேண்டும்.

சிலையின் உயரம் அதன் பீடம் மற்றும் அடித்தளத்துடன் சேர்த்து 10 அடிக்கு மிகாமல் இருக்க வேண்டும். மருத்துவமனைகள் கல்வி நிறுவனங்கள், பிறவழிபாட்டு தலங்கள் அருகில் சிலை வைப்பதை தவிர்க்கவேண்டும். காவல் துறையால் கொடுக்கப்படும் ஒலிபெருக்கி உரிமம் பயன்படுத்தும் காலஅளவு காலை 2 மணி நேரம் மற்றும் மாலை 2 மணி நேரத்துக்கு மட்டுமே. கூம்புவடிவ ஒலிபெருக்கிகள் தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே ஸ்பீக்கர் பாக்ஸ் மட்டுமே பயன்படுத்தலாம். மேலும் ஒலிபெருக்கியிலிருந்து வரும் சத்தம், பாடல்கள் உட்பட வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச சத்தமாக இருக்க வேண்டும். அளவீட்டுக்கு அதிகமான சத்தம் தடை செய்யப்படுகிறது.

சிலை நிறுவப்பட்ட இடத்தில் அரசியல் கட்சி அல்லது ஜாதி தலைவர்களின் தட்டிபோர்டு கண்டிப்பாக வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. சிலை நிறுப்பட்ட இடத்தில் 24 மணி நேரமும் யாராவது 2 தன்னார்வ நபர்கள் பாதுகாப்புக்காக இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நான்கு சக்கர வாகனங்களான மினிலாரி, டிராக்டர் மட்டுமே சிலைகளை கரைக்க கொண்டு செல்லப் பயன்படுத்த வேண்டும். விநாயகர் சிலை நிறுவப்பட்ட இடத்திலோ, கரைப்பதற்கு கொண்டு செல்லப்படும் ஊர்வலத்திலோ, சிலையை கரைக்கும் இடத்திலோ கண்டிப்பாக பட்டாசுகள் வெடிப்பது தடை செய்யப்படுகின்றது. விநாயகர் சிலைக்கு அணிவிக்கப்பட்ட பூ மற்றும் மாலைகள், துணிகள் அழகு சாதன பொருட்கள் கரைக்கப்படுவதற்கு முன்பு பிரிக்கப்பட வேண்டும்.

விநாயகர் சிலைகரைப்பதற்கான ஊர்வலம் 12.00 மணிக்குள் சிலைகள் கரைப்பதற்காக அறிவிக்கப்பட்ட இடத்துக்கு கொண்டு செல்லப்படவேண்டும். சிலை கரைப்புக்கான ஊர்வலம் செல்லும் பாதைகாவல் துறையினர் வரையறுத்துக் கொடுத்த பாதை வழியாக மட்டுமே கொண்டு செல்லப்பட வேண்டும். சூரியன் மறைவதற்குள் அனைத்து சிலைகளும் கரைக்கப்பட வேண்டும். பொது அமைதி, பொதுமக்கள் பாதுகாப்பு, சமூக ஒற்றுமை ஆகியவற்றினை பாதுகாக்கும் நோக்கோடு வருவாயத்துறை / காவல்துறை / தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளால் பிறப்பிக்கப்படும் இதர நிபந்தனை மற்றும் கட்டுப்பாடு விதிகளையும் ஏற்பாட்டாளர்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

உடன் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.விஜய பாஸ்கரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.மா.சுகன்யா, அனைத்துறை அலுவலர்கள் மற்றும் இந்து அமைப்பினர் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.